IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 231/2018

சாட்சி : DW1

பெயர் : சின்னமுத்து தேதி: 21-03-2025

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

வா.த.சா.ஆ- A1 படி நான் இது வரை நடந்துகொள்ளவில்லை என்றால் சாட்சி, வழக்கறிஞர் மூன்று முறை ஒரே கேள்வியை திரும்ப திரும்ப கேட்டும் பதில் சொல்லாமல் வெறுமனே நின்று கொண்டிருக்கிறார். பதில் வழக்குரையில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். அதன்படி நான் வாதிக்கு இதுவரை தொகை தர முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த பணத்தை திருப்பி தரவில்லை. நான் பதில் அறிவிப்பு தரவில்லை. வா.த.சா.ஆ- A1 கிரய உடன்படிக்கையை நிராகரிக்குமாறு நான் வழக்கு ஏதும் போடவில்லை. எனக்கும், வாதியின் கணவருக்கும் உள்ள வரவு, செலவு தனிப்பட்ட முறையிலான வரவு செலவு என்று சொன்னால் சரியல்ல.

பதில் உரையுடன் நான் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் பின்னிட்டு ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், வாதிக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த ஆவணங்களை எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கை திசை திருப்பதற்காக நான் ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் வாங்கிய சொத்தில் தாவா சொத்து ஒரு பகுதி என்றால் ஆமாம்.

கிரய உடன்படிக்கை செய்து கொண்டதிலிருந்து உடன்படிக்கை காலக்கட்டத்திற்குள் தாவா சொத்தின் விலை கூடிவிட்டது என்று சொன்னால் ஆமாம். வா.த.சா.ஆ– A1 கிரய உடன்படிக்கைபடி நான் பெருமாண்மையான தொகையை பெற்றுக்கொண்டபடியால் மீதி தொகை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதிக்கு கிரயம் செய்து கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக சொத்தை விற்பதற்காக கிரய உடன்படிக்கை போட்டுக்கொண்டு, இப்போது கடன் பெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் வாங்கிய கடன் தொகை, எவ்வளவு வட்டி என்றும், அதன் விவரங்களை பதில் வழக்குரையில் கூறவில்லை என்றால் ஆமாம். வாதியை ஏமாற்றுவதற்காக கடன் வாங்கியதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மீதி கிரய தொகை ரூ 50,000/– வாதி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 14.12.2015ம் தேதிக்கு முன்னரே வாதிக்கு தாரமங்கலம், ஸ்டேட் வங்கியில் கணக்குள்ள விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. பிறகு தெரியும்.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.